## சபரிமலை விரதம் - சந்தேகங்கள்

1. *விரதம் இருக்கும் சமயத்தில் எத்தனை மாலை போட வேண்டும்?*
உறுதியான கம்பியில் கட்டிய ஒரு மாலையே போதுமானது. துணை மாலை அவசியமே இல்லை.

2. *மாலையில் ஐயப்பன் டாலரை மாட்டிக்கொள்வது அவசியமா?*
அவசியமில்லை.

3. *ஒற்றை தேதியில் மாலை போடக்கூடாது என்பது சரியா?*
தவறான கண்ணோட்டம்.

4. *மாலையை தங்கத்தில் அல்லது வெள்ளியில் செய்து அணிவது தவறாகுமா?*
ஐயப்பனுக்கு மிகவும் பிடித்தது எளிமையும் தூய்மையும்தான்.

5. *கோயிலுக்குச்சென்று மாலை போட இயலாத பட்சத்தில் வேறு என்ன செய்யலாம்?*
அம்மாதான் முதல் தெய்வம். அம்மாவைக்கொண்டு மாலை அணிந்து கொள்ளலாம்.

6. *மாலை போடாமல் 41 நாட்கள் விரதமிருந்து, புறப்படும் நாளன்று மாலை போடலாமா?*
முறையாக விரதம் இருந்திருப்பீர்களேயானால் தங்களது மனசாட்சி அனுமதிக்கும் பட்சத்தில் தவறேதும் இல்லை.

7. *சென்ற தடவை உபயோகித்த மாலையை மறுமுறை போடக்கூடாது என்பது சரியா?*

தவறு. ஒரு மாலையை எத்தனை முறை வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம், அது உறுதியாய் இருந்தால்.

8. *கற்பூர ஆரத்தியில் மாலையைக் காண்பிக்கலாமா?*

கூடாது. (மாலையில் ஐயப்பன் டாலரை போட்டிருக்கும் பட்சத்தில் ஐயப்பனை நெருப்பில் காண்பிக்கலாமோ?)

9. *சபரிமலையில் தரிசனம் செய்த பிறகு வழியிலேயே மாலையைக் கழற்றலாமா?*

வீட்டிற்குத் திரும்பிய பிறகு மாலையை கழற்றுவது தான் முழுமையான, முறையான, உத்தமமான செயலாகும்.

10. *மாலையை ஏதாவது ஒரு கோயிலில் கழட்ட இயலாத பட்சத்தில் வேறு எப்படிக் கழற்றலாம்?*

அம்மாவைக்கொண்டு கழற்றலாம்.

11. *ஒருமுறை மாலையைக் கழட்டினால், ஒரு மாதத்திற்குப்பிறகு மாலை போடலாமா?*

ஒரு முறை மாலையைக் கழட்டினால், ஒரு வருடத்திற்குப் பின் மறுபடி மாலை போடுவதுதான் சரியான செயலாகும்.

*12. மாலை அணிந்து விரதம் இருக்கும் நாட்களிலும் சபரிமலைப் பயணத்தின் போதும் சில ஐயப்பன்மார்கள் புகைபிடித்தல் போன்ற லாகிரி வஸ்துக்களை உபயோகின்றார்களே, இது சரியா?*

புலன்களை அடக்கத்தெரியாதவர்களை ஐயப்பன்மார்கள் என்று அழைப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள இயலாது.

*13. மாலை போட்டுக்கொண்டே தகப்பனாருக்கு சிரார்த்தம் (திதி) செய்யலாமா?*

செய்யலாம். பம்பையில் இதைத்தானே நாம் செய்கிறோம்.

*14. என் தாய்மாமன் இறந்து இரண்டு மாதமாகிறது. மாலை போடலாமா?*

தாய் வழியில் தீட்டில்லை, மாலை போடத் தடையில்லை.

*15. என் சித்தப்பா இறந்து நான்கு மாதமாகி விட்டது. மாலை போடலாமா?*

தந்தை வழியில் தீட்டு மூன்று மாதமே. மாலை போடலாம், தடையில்லை. அதே சமயம் அப்பா, அம்மா, சகோதர, சகோதரி, மகன், மகள் இறந்தால் ஒரு வருடத்திற்கு மாலை போட இயலாது.

*16. என் பாட்டி இறந்து விட்டார்கள். (மாலை அணிந்த) நான்தான் எல்லா காரியமும் செய்ய வேண்டும். என்ன செய்வது?*

செய்ய வேண்டிய கடமையை சரிவர செய்யாமல் மலைக்கு செல்வதை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. மாலையைக் கழற்றி விட்டு பிறகு ஆக வேண்டியதை கவனிக்கலாம்.

*17. என் மனைவி கருவுற்று உள்ளார்கள். மாலை போடலாமா?*

கருவுற்றிருப்பது சுபகாரியமே... மாலை போடலாம்.

*18. மாலை போட்டு விரதம் இருக்கும்போது என் மனைவிக்குக் குழந்தை பிறந்து உள்ளது. மாலையைக் கழற்ற வேண்டுமா?*

குழந்தை பிறப்பதென்பது சுபகாரியமே. மாலையைக் கழற்ற வேண்டாம். குழந்தை பிறந்த 16 நாட்கள் கழித்து புண்ணியதானம் முடிந்து குழந்தையைப் பார்க்கலாம்.

பிரசவ சமயத்தில் தாங்கள் உடன் இருக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருந்தாலும், குழந்தையை உடனே பார்க்க வேண்டும் என்ற பாச உணர்வு இருக்கும் பட்சத்திலும் மாலையைக் கழற்றலாம்.

*19. மாலை போட்டு விரதம் இருக்கும் சமயத்தில் என் மகள் வயதிற்கு வந்து விட்டாள். இது தீட்டு என்பதால் மாலையை கழற்றலாமா?*

வயதிற்கு வருவதென்பது சுபகாரியமே. மாலை கழற்ற வேண்டிய அவசியமில்லை. புண்ணியதானம் செய்யும் வரையில் தனியே இருக்கவும். அதன் பிறகு அன்பு மகளைப் பார்க்கலாம்.

*20. பன்னிரண்டு வயதுள்ள என் மகளை அவள் வயதுக்கு வருமுன் சபரிமலைக்கு அழைத்துச் செல்ல ஆசைப்படுகிறேன். செல்லலாமா?*

நீதிமன்ற உத்தரவுப்படி 10 வயது முதல் 50 வயது வரை உள்ள பெண்கள் சபரிமலைக்கு செல்ல அனுமதி இல்லை. ஆகையால் தாங்கள் அழைத்துச் செல்ல வேண்டாமே!.

*21. என் மனைவியைக்கூட்டி கொண்டு சபரிமலை செல்லலாமா?*

மனைவியின் வயது 50க்கு மேல் இருந்தால் மனைவியைக் கூட்டிக்கொண்டு செல்வதில் தவறில்லை.

*22. என் அலுவலகத்தில் நிறைய பெண்கள் வேலை செய்கிறார்கள். வீட்டு விலக்கான பெண்களைப் பார்ப்பது தவிர்க்கமுடியாது. என்ன செய்யலாம்?*

வீட்டு விலக்கு என்பது இயற்கை நிகழ்வாகும். அதற்காக மிகுந்த சஞ்சலப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால், அலுவலகத்திற்கு தாங்கள் கருப்பு வேட்டி அணிந்து செல்லும்பட்சத்தில் அப்படிப்பட்டவர்கள் தங்கள் நிலையை உணர்ந்து, கூடியவரை உங்கள் கண்ணில் படாமல் விலகி இருக்க ஏதுவாக இருக்கும்.

*23. குறைந்த பட்சம் ஒரு வாரம் விரதம் இருந்து பயணம் மேற்கொள்ளலாமா?*

நாற்பத்தி ஒன்று நாட்கள் முறையாக விரதம் இருந்து பயணத்தை மேற்கொள்வதுதான் போற்றத்தக்க உத்தமமான செயலாகும். அதுவே சரி.

*24. சபரிமலைப் பயணத்தில் மிதியடி அணிந்து கொள்வது தவறா?*

தங்கள் உடல்நிலையை கருத்தில் கொண்டு தகுந்த முடிவு எடுக்கலாம்.

*25. சர்க்கரை வியாதி உள்ளவர்கள் மிதியடி அணிவது தவறா?*

சர்க்கரை வியாதி சற்று கடுமையாக இருக்கும் பட்சத்தில் மிதியடி அணிவது தவறில்லை.

*26. சபரிமலையில் ஐயப்பனை எத்தனை தடவை தரிசன ம் செய்யலாம்?*

ஐயப்பன்மார்கள் கூட்டம் மிக அதிகமாக இருக்கும் பட்சத்தில் ஒரு தடவை தரிசனம் செய்தாலே போதுமானது. மற்றவர்களுக்கு விட்டுக்கொடுத்தல் ஒரு நல்ல ஐயப்ப பக்தனுக்கு அழகு. தாங்கள் விரதத்தை உண்மையாக கடைபிடிக்கும்பட்சத்தில் சபரிமலை ஐயப்பனை தரிசிப்பது ஒரு Photo எடுப்பது போல என்பார்கள் அனுபவமிக்க குருசாமிகள். (திருப்பதியில் நாம் ஒருதடவைதானே சில விநாடிகள் தரிசிக்க முடிகின்றது.)

*27. சபரிமலை சந்நிதானம் அல்லாமல் மற்ற கோயில்களில் ஐயப்ப பக்தர்கள் மிக சத்தமாக சரணம் விளிக்கிறார்களே, அமைதிக்கு பந்தம் விளைவிக்கும் வகையில். ஐயப்பன்மார்கள் என்றாலே உரக்கக்கத்தி சரணம் விளிக்க வேண்டுமா என்ன ?*

சரணம் விளிப்பதில் ஆவேசம் இல்லாமல் சப்தம் இல்லாமல் மிக அமைதியாக வழிபடுவது உத்தமமான செயலாகும். ஐயப்பனுக்கு மிகவும் பிடித்தவை அமைதியும் தூய்மையுமே. SILENCE IS THE LANGUAGE OF GOD.

*28. ஒரு முறை உபயோகித்த இருமுடிப்பையை மறுமுறை உபயோகிக்கலாமா?*

உபயோகிக்கலாம், நன்றாக இருக்கும் பட்சத்தில்.

*29. இன்னொருவர் உபயோகித்த இருமுடிப்பையை நான் உபயோகிக்கலாமா?*

தவறேதுமில்லை, அது சுத்தமாக இருக்கும் பட்சத்தில்.

*30. கன்னி பூஜை அவசியம் செய்ய வேண்டும் என்கிறார்கள். வசதியில்லாத பட்சத்தில் நான் என்ன செய்யலாம்?*

கடன் வாங்கியாவது கன்னி பூஜை செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஐயப்பன் அத்தகைய ஆடம்பரத்தை விரும்புவதில்லை. தங்களால் எவ்வளவு முடியுமோ, எப்போது இயலுமோ, வீட்டிலேயே உணவைப் பொட்டலமாகக் கட்டிக்கொண்டு சாலையோரத்தில் உள்ள மிகவும் வயதானவர்கள், உடல்குறை உள்ளவர்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் போன்றவர்களுக்கு தங்களால் இயன்ற வரை தானம் அளிக்கலாம்.

*31. நெருங்கிய உறவினர் நோயின் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரை சென்று பார்ப்பதில் தவறுண்டா?*

சென்று பார்ப்பதில் தவறில்லை. சென்று வந்தபிறகு குளித்தல் நல்லது.

*32. விரத சமயத்தில் அணிவதற்கு வசதியாக பர்முடாஸ், அரை டிராயர் அணியலாமா?*

அது ஒரு நல்ல பழக்கமில்லையே ஐயா!

*33. விரதமிருக்கும்போது நகம் வெட்டலாமா?*

தவறேதுமில்லை.

*34. தொழிற்சாலையில் வேலை செய்யும் நான் ஷு (Shoe) போடுவது அவசியம். இதில் நான் என்ன செய்ய வேண்டும்?*

கடமையை சரிவர செய்யும்பொருட்டு அதை அணிவதில் தவறேதும் இல்லை.

*35. விரத காலத்தில் எண்ணெய், சீகைக்காய் உபயோகிக்கலாமா?*

எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டாம். மற்றபடி சாதாரணமாக உபயோகிப்பதில் தவறில்லை.

*36. நாற்பத்தி எட்டு வயதுள்ள எனக்கு கர்ப்பப்பையினை சமீபத்தில் எடுத்து விட்டார்கள். அதற்குண்டான சான்றிதழை எடுத்துக்கொண்டு நான் சபரிமலை செல்லலாமா?*

விதிமுறைகளின் படி தாங்கள் செல்ல இயலாது. அப்படியே சென்றாலும், மலை ஏறுவதற்கு முன்னால் காவல்துறை தங்களைத் தடுத்து விடும் பட்சத்தில் மிகுந்த ஏமாற்றத்திற்கு உள்ளாக நேரிடும். இன்னும் இரண்டு ஆண்டுகள் தங்கள் ஆர்வத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாமே அம்மா!

*37. சபரிமலைக்கு விரதமிருக்கும் ஐம்பது வயதிற்கு மேற்பட்ட பெண்கள் இரு வேளையும் தலை குளிப்பது அவசியமா?*

உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாது என்றால் ஒரு வேளை குளித்தாலே போதும்.

*38. மாலை அணிந்து விரதமிருக்கும் நாளில் உடுப்பதற்கு வசதியாக பெண்கள் சுடிதார் அணியலாமா?*

துப்பட்டாவுடன் கூடிய பாந்தமான சுடிதார் கருப்பு அல்லது நீல நிறத்தில் அணியலாம்.

*39. மாலையணிந்து விரதம் இருக்கும் காலங்களில் சுபகாரியங்களுக்கு செல்லும்போது பட்டுப்புடவை அணிந்து செல்லலாமா?*

தவிர்ப்பது உத்தமம். கருப்பு அல்லது நீல ஆடை அணிவதுதான் முக்கிய நோக்கம். நீங்கள் விரதம் கடைப்பிடிக்கிறீர்கள் என்பது அப்படிப்பட்ட உடையில் செல்லும் போது தெரிந்து அங்கு வந்திருக்கும் வீட்டு விலக்கான பெண்கள் தங்களைக்கண்டு ஒதுங்கிவிட வாய்ப்பு உண்டு. ஐயப்ப விரதம் கடைப்பிடிக்கும் போது சுபகாரியங்களுக்குச் செல்லும் சமயம் எந்த விதமான பகட்டுக்கும் ஆடம்பரத்திற்கும் ஆசைப்படாமல் தங்களுக்கு உண்டான எளிய உடையில் செல்வதே போற்றத்தக்க செயலாகும்.

*40. மாலை போட்டுக்கொண்டு விரதம் இருக்கும் சமயத்தில், வீட்டிலுள்ளவர்களுக்கு அம்மை கண்டுள்ளது. மாலையைக் கழற்ற வேண்டுமா?*

தாங்கள் அதே வீட்டில் இருக்கும் பட்சத்தில் மாலையைக் கழட்டுவது நல்லது. ஆனால் தாங்கள் வெளியே எங்கும் தங்கியிருந்தால் மாலையைக் கழற்ற வேண்டிய அவசியமில்லை.

*41. கோயிலில் தான் இருமுடி கட்ட வேண்டும் என்பது அவசியமா?*

41 நாட்கள் முறையாக விரதம் இருந்து இருமுடி கட்டுதல் என்பது ஒரு யாகம் அல்லது ஹோமம் செய்வதற்குச் சமமாகும். இந்த வைபவத்தை வீட்டிலேயே எளிமையாகவும், பக்தி பூர்வமாகவும் ஆத்மார்த்தமாகவும் செய்வது வீட்டிற்கு சுபிட்சத்தை கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. போட்டோ, வீடியோ தவிர்க்கலாமே!

*42. எனக்கு திருமணமாகி ஐந்து மாதங்கள் ஆகின்றன. ஒரு வருடத்திற்கு பிறகுதான் மலைக்கு செல்ல வேண்டும் என்கின்றனர் சிலர். நான் என்ன செய்வது?*

விரதத்தை சரிவர கடைப்பிடிப்பீர்கள் என்ற மன உறுதி இருந்தால் மாலை போடுவதில் தவறேதுமில்லை.